முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், நாகர்கோவில்

நாள். 12.11.2025

O.S. No. 21/2024

வா.சா.1. பெருமாள்

1,2 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை.

இந்த வழக்கில் நான் தாக்கல் செய்துள்ள ஆவணங்களை படித்துப் பார்த்து விவரங்களை தெரிந்து கொண்டு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். வா.சா.ஆ.1 ல் 2 வது பக்கத்தில் 1845 நம்பர் தண்டபேருக்கு கொண்டதாகும் என்று சொல்லப்பட்டுள்ளது என்றால் சரி. அதில் கன்னியாகுமரி வில்லேஜ் பொட்டல்குளம் களக்காடு கன்னாறு 25 ல் பண்டாரஒற்றி சர்வே 2346 சொல்லப்பட்டுள்ளது என்றால் சரி. வா.சா.ஆ.2 ஆவணத்தில் மேற்படி விவரங்கள் சொல்லப்பட்டுள்ளது என்றால் சரி.

பொட்டல்குளம் கரை என்று வா.சா.ஆ. 2 ஆவணத்தில் சொல்லப்பட்டுள்ளதா என்றால் சொல்லப்பட்டுள்ளது. நடேசனின் இறப்பு சான்றிதழை இந்த வழக்கில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் செய்துள்ளேன். உண்மையில் தாக்கல் செய்யாமல் நான் வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. வழக்கச் சொத்தில் எனது சகோதரி கணகாவிற்கும் உரிமையுள்ளது என்றால் சரி. அவரை இந்த வழக்கில் தரப்பினராக சேர்க்கவில்லை என்றால் சரி . அவரிடம் விடுதலை பத்திரம் எழுதி வாங்கிவிட்டேன். அந்த ஆவணத்தை தாக்கல் செய்யவில்லை. வா.சா.ஆ.3 ஆவணத்தின் அடிப்படையில் சொத்து பரிமாற்றம் செய்துள்ளேனா என்றால் இல்லை. வா.சா.ஆ.4 உயில் ஆவணத்தில் எனது சகோதரிக்கு சொத்துக்கள் ஒதுக்கவில்லை என்றாலும் அதில் என் சகோதரி சாட்சி கையொப்பம் செய்யவில்லை என்றாலும் சரி. எனது பிராதிலும் முதல் விசாரணையிலும் எனது பெற்றோருக்கு உரிமைப்பட்ட சொத்துக்களை அவர்களது வாரிசுகள் கூட்டாக

அனுபவித்து வருகிறார்கள் என்று சொல்லியுள்ளேன் என்றால் சரி. எனது அப்பாவிற்கு பாத்தியப்பட்ட சொத்துகளின் விவரங்கள் சொல்லியுள்ளேன் என்றாலும் என் அம்மாவின் சொத்துகளின் விவரம் எதுவும் சொல்லவில்லை என்றால் சரி. எனது அம்மா சொத்துக்களை விலைக்கு வாங்கியதாக ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்றால் சரி. ரீ சர்வே எண் . 271/33 ற்கு 12 சென்ட் என்று பிராதிலும், நிரூபண வாக்குமூலத்திலும், வா.சா.6 ஆவணத்திலும் சொல்லிவிட்டு வழக்குப் பட்டிகைச் சொத்தின் 12 ¾ சென்ட் என்று முரணாக சொல்லியுள்ளேன் என்றால் சரி.

எனது பெற்றோருக்கு செல்வராஜ் என்று வாரிசுகள் உள்ளார்களா என்றால் இல்லை. வா.சா.ஆ. 8 வரி ரசீதுகளில் செல்வராஜ் பெயருக்கு உள்ளது என்றால் சரி. அது செலுத்துவோர் பெயர் என்று உள்ளது. வா.சா.8 ஆவணத்தை தவிர எங்களது பெயரிலோ எங்களது பெற்றோர்கள் பெயரிலோ பி மெமோ அல்லது வரி செலுத்தியதாக ஆவணங்கள் எதுவும் உள்ளதா என்றால் உள்ளது. எங்களது அப்பா பெயரில் உள்ள ஆவணங்களை இந்த வழக்கில் தாக்கல் செய்யலாமா என்றால் செய்யலாம். 1959 லிருந்து வருவாய் துறை ஆவணங்களை தாக்கல் செய்ய முடியுமா என்றால் முடியும். வா.சாஆ.9 பழைய செட்டில்மென்ட் ரெஜிஸ்டெர் என்றால் சரி.

அந்த ஆவணம் பழைய சர்வே எண் 2346 , 2331, 2317 ஆகியவைகளுக்கான ஆவணம் என்றால் சரி. அதனை அ பதிவேடு என்று தவறுதலாக குறிப்பிடுள்ளேன் என்றால் சரி. வா.சா.ஆ.9 ல் பொட்டல்குளம் என்றும் மருத்துவாமலை பிராஞ்சுசான் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரி. பழைய சர்வே 2346 பழைய சர்வே காலத்திலேயே நீர் நிலை என்றால் சரியல்ல. ரீசர்வே எண் 271/33 என்பது அரசு புறம்போக்கு என்றால் சரியல்ல. ரீசர்வே செட்டில்மென்ட் 1971 ல் இருந்து 1975 ற்குள் முடிந்து விட்டது என்றால் சரி.

ரீசர்வே எண் எதாவது தவறாக இருப்பின் அதற்குட்பட்ட காலத்திற்குள் உரிய அதிகாரியிடம் உரிய மனு தாக்கல் செய்து முறையிட்டிருக்க வேண்டும் என்றால் சரி. அவ்வாறு நானோ எனது அப்பாவோ முறையீடு செய்து இருந்ததாக மனு எதனையும் இந்த வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரி. இந்த வழக்குச் சொத்தில் உரிமை இல்லாததால் நாங்கள் உரிய காலத்தில் மனு செய்யவில்லை என்றால் சரியல்ல. இந்த வழக்கில் தாக்கல் செய்துள்ள வா.சா.ஆ.4 ஆவணம் செல்லுபடியாகாத ஆவணம் என்றாலும் வழக்குச் சொத்தை கட்டுப்படுத்தாக ஆவணம் என்றாலும் சரியல்ல. வழக்குச் சொத்தை தவிர வா.சா.ஆ.4 ல் எனக்கு வேறு சொத்துக்களும் உள்ளது என்றால் சரி.

வழக்குச் சொத்து நீர் நிலை என்பதால் அதில் நான் எந்த வித உரிமையும் கோர முடியாது என்றால் சரியல்ல. வழக்குச் சொத்து அரசு சொத்து என்று எந்த தேதியில் விசாரித்து தெரிந்து கொண்டேன் என்றால் தெரியாது. வா.சா.ஆ.8 பி மெமோ படி நான் அனுபவித்து வருவதால் எந்த விதமான எதிரிடை பரிகாரமும் நான் கோரமுடியாது என்றால் சரியல்ல. இந்த வழக்கில் நான் விளம்புகை பரிகாரம் கேட்கவில்லை என்றால் சரிதான். நிரூபண வாக்கு மூலத்தில் சொல்லியுள்ள விவரங்கள் தவறானவை. என்றாலும் வழக்கு பரிகாரம் கிடைக்கத்தக்கதல்ல என்றாலும் வழக்கு பிரதிவாதிகளின் செலவுத் தொகையுடன் தள்ளுபடி செய்யத்தக்கது என்றாலும் வழக்கிற்கான எந்த முகாந்திரமும் வழக்கு மூலமும் இல்லை என்றாலும் சரியல்ல.